'F'

# WHY CLOSE COMMUNION

## (இடை வெளியில்லாத) நெருங்கிய திருவிருந்து ஏன்?

லூத்தரன் திருச்சபையினராகிய நம்முடைய நடைமுறை எப்பொழுதும் நெருங்கிய மிக நெருக்கமான ஆராதனை தான். ஒருவர் வா, ஒருவர் பின் ஒருவராக வாருங்கள். எல்லோரும் வாருங்கள் என்ற அடிப்படையில் நாங்கள் கர்த்தருடைய திருவிருந்தை பரிமாறுவதாயிருக்காது. அடிக்கடி பார்வையாளர்கள். இது போன்ற ஆராதனையை புரிந்து கொள்வதில்லை. அவர்கள் ஒரு சில சமயங்களில் அவமரியாதையாக உணர்கின்றனர்.

ஏனென்றால் நாங்கள் உங்களுடைய இத்தகைய உணர்வுகளைக் குறித்து மிகவும் கவலைப் படுகிறோம். ஆகவே எங்களை நீங்கள் புரிந்து கொள்வதற்கு தயவு செய்து ஒரு சில நொடிகள் ஏன் நாங்கள் நெருக்கமான நெருங்கிய திருவிருந்து அனுசரிக்கிறோம் என்பதை குறித்து படித்து எங்களை புரிந்து கொள்ளுங்கள். 1 இது (இடைவெளியில்லாத) நெருக்க முடையதாயிருக்கிறது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து அப்படி கற்பித்து இருக்கிறார். அது நல்ல உதாரணமாயிருக்கிறது.

நியதிப்படி திருவிருந்து ஆராதனையில் பங்கு கொள்ளும் போது, அதை அனுசரிக்கும் போது சரியாக என்ன நடக்கிறது என்பதைக் குறித்து வேறுபட்ட ஜனங்கள் வெவ்வேறு பார்வையுடையவர்களாய், மாறுபட்ட கருத்துகளையுடைய வர்களாகவும் இருக்கின்றனர். இது ஞாபகார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், இது சாப்பாடு என்றும், அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லையென்றும், ஒரு சிலர் எண்ணுகின்றனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் குறிக்கும், சாதரண அப்பமாயும், இரசமாயும் இருக்கிறது என்றும் எண்ணுகின்றனர். ஆனபோதிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முதன்முதலாக அவருடைய சீஷர்களுக்கு திருவிருந்து எப்போது கொடுத்தாரோ அப்போது அவர் அவர்களுக்கு அவர்கள் சரியாக எதை பெற்றுக் கொள்கின்றனர் என்பதைக் குறித்துச் சொன்னார்.

“அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டு, அவர்களுக்கு கொடுத்து நீங்கள் வாங்கி புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதை அவர்களுக்கு கொடுத்தார். அவர்களெல்லாரும் அதில் பாணம் பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, இது அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்ககுறிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” மாற் 14:22–24.

எங்களுடைய திருவிருந்து ஆராதனையில் நாங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மெய்யான திருச்சரீரத்தையும், திரு இரத்தத்தையும் முறையே அப்பபத்திற்குள்ளும், இரசத்திற்குள்ளும் பெற்றுக் கொள்கிறோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப்படும், இரசமும் எந்தவிதமான பௌதீக மாற்றத்திற்குள் போவதில்லை. ஆச்சர்யமான அதிசயிக்கத்த விதத்தில் நாம் புரிந்து கொள்ள முடியாதபடி மெய்யான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரமும், திரு இரத்தமும் அதில் இருக்கிறது. நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்திலும், திரு இரத்தத்திலும் பங்கு கொள்வதின்மூலம் இன்னும் கூடுதலான பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சம்மந்தப்பட்ட எனக்கு அவருடைய திருச்சரீரத்தையும், திரு இரத்தத்தையும் கொடுத்தினால் அது நம்மை விசுவாசத்தில் திடப்படுத்துகிறதாய் இருக்கிறது என்று சொல்கிறது. அன்று முதல் இன்று வரை சாதாரண அப்பம், இரசத்தைக் காட்டிலும், அதைவிட அதி அதிகமாய் இது இருக்கிறது. உண்மையாகவே நாங்கள் திருவிருந்து என்கிற சாக்கிரமெந்துவை தேவனுடைய வார்த்தைகளின்படியும், வேதாகம ஊதாரணத்தை சார்ந்து கையாளுகின்றோம். இது நாம் நினைத்தபடி, நம்முடைய யோசனையின்படி, நம்முடை இஷ்டத்திற்கு செய்கிறது அல்ல. இது கர்த்தருடைய பந்தியாயிருக்கிறது.

இந்த பூமியில் இங்கே அவருடைய ஜீவியத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையை எல்லாருக்கும் போதித்தார்.

எப்போது அவர் அவருடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டார். அவர் சீஷர்களை துரிதப்படுத்தினார். ஊக்கப்படுத்தினார் நீங்கள் சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தை போதியுங்கள் என்றும் மாற்கு 16:15 சகல ஜாதிகளையும், சீஷராக்கி அவர்களுக்கு ஞானஸ்ஞானம் கொடுங்கள் மத் 28:13 ஆனால் அவர் எப்போது திருவிருந்தை ஏற்படுத்தினாரோ அவர் தம்முடைய சீஷர்களை மாத்திரம் அதில் பங்கு பெறும் படியாக சேர்த்துக் கொண்டார். பொது ஜனங்களை அல்ல.

ஒரு சிலர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மெய்யான சீஷர்களாயிருக்கலாம். நம் ஆராதனையில் அவர்களை அவ்விதமாய் நியாயந் தீர்க்க நாம் முயற்சி செய்யக்கூடாது. ஒரு மனிதனுடை இருதயத்தை ஆராய்ந்து பார்க்க வழயில்லை. திருவிருந்தில் பங்கு பெறுபவர்கள் எனன சொல்கிறார்களோ அதை வைத்து நாம் போக வேண்டியதாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும்

கர்த்தருடைய பந்தியை குறித்தும் தேவனுடைய வார்த்தையைக் குறித்தும், கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவருடைய அவன் (அ) அவள் விசுவாசத்தை குறித்து எச்சரிக்கையாய் நாங்கள் உணர்கின்றோம். கர்த்தருடைய பந்தியை குறித்த அவர்கள் விசுவாசத்தை குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டியது மிக முக்யமாயிருக்கிறது. அந்த ஸ்தலத்தின் மேல் நாம் செய்கிற ஒரு குறிப்பிட்ட செய்கையாய் இல்லாமல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரத்தையும் அவருடைய திரு இரத்தத்தையும் எப்போதும் கையாளுகின்றோம் என்ற ஒரு பொறுப்புணர்ச்சியாயிருக்கிறது.

**II - இது நெருங்கியதாயிருக்கிறது - ஏனென்றால், நாங்கள் யாருக்கும் தீங்கு செய்ய விரும்பவில்லை.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சரீரமும், திரு இரத்தமும் ஆச்சர்யமான முறையில் ஆச்சர்யமான ஆசீர்வாதத்தின் மூலமாயிருக்கிறது. இது யாருக்காவது தீங்கு விளைவிக்குமா?

இப்படியிருக்க எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுசனும், தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். எண்ணத்தினாலெனில் அபாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்.. தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான் 1 கொரி. 11:27–29.

செய்கின்ற பாரமான, கடினமான காரியத்தை உணர்ந்து நாங்கள் உணர்வுள்ளவர்களாய் திருவிருந்து நியமத்தில் பங்கு கொள்ளும் அனைவரும் என்ன ஒப்பந்தத்தில் சரியாக தயார் செய்யப்பட்டதாய் அது இருக்கிறது. இது மிகப் பெரிய பொறுப்பற்றதாய் இல்லாமல் (ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்) நாம் நினைத்து சொல்லுகிறோம். வாங்கி, புசியுங்கள், எப்போதும் ஒரு சிலர் இதில் என்ன இருக்கிறது என்பதை சரியாக குறிப்பிடுவதில்லை.

நாம் நம்முடைய பொறுப்பற்றதனத்தால், நியாயத் தீர்ப்பை யார் மேலேயும் கொண்டு வராமல், சாதாரண அப்பத்திற்குள்ளும், இரசத்திற்குள்ளும், ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்துவின் மெய்யான திருச்சரீரத்திற்கும், திரு இரத்திற்கும் இடையில் இருக்கிற ஒரு உன்னதமான ஸ்தலத்தை உருவாக்க ஒரு மனிதன் தவறிவிட்டால், அது மெய்யாகவே ஒரு உண்மையான பயங்கரமாயிருக்கும்.

கர்த்தருடைய இராப்போஜன பந்தியானது மிகப் பெரிய வல்லமையைப் போல் இருக்கிறது.

விசுவாசம் – நிலைத்த மருந்தாய் இருந்து ஒரு குறிப்பிட்ட அதைப் போன்ற மிக அதிகமான நன்மைகளை தருகின்றது. ஆனால், அதை தவறாக பிரயோகம் செய்து பயன்படுத்தும்போது தீங்கு விளைவிக்கக் கூடியதாயும் கூட இருக்கிறது. அவ்விதமான கடவுள் தள்ளவிடக்கூடிய பரிகார அடிப்படையில் இது உள்ளது. இது ஒரு நாகரீகமான தியான போஜன மேஜையல்ல.

**III இது நெருக்கமுடையதாயிருக்கிறது. ஏனென்றால், திருவிருந்து நம் மெய்யான விசுவாசத்தினுடைய ஐக்யத்தின் வெளிப்பாடாயிருக்கிறது.**

இந்த கேள்வி இப்போது கேட்கப்படுகின்றது. யாரெல்லாம், வெளிப்படையாய் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றார்களோ அவர்களையும், ஒரு குறிப்பிட்ட எல்லாரையும் ஏன் கர்த்தருடைய பந்தியில் நாம் அனுமதிப்பது இல்லை?

இது பதில்வேதாகமப் புத்தகம் நமக்கு காட்டுகிறது. அந்த அவர்கள் யாரெல்லாம் கர்த்தருடைய பந்தியில் அவர் மேஜை முன் ஒன்று சேர்கின்றார்களோ அவர்கள் வெளிப்படையாக பொதுவான விசுவாசத்தையும், எல்லாப் பகுதியான தேவனுடைய வார்த்தைகளிலும் அவர்களோடு ஒருங்கிணைந்து ஒற்றுமையாய் இருப்பதற்கு வெளிப்படையாய் சம்மதம் தெரிவிக்கிறவர்கள்.

அந்த ஒரே அப்பத்திலே நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம் 1 கொரி 10:17.

சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும், உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்திச் சொல்லுகிறேன் 1 கொரி. 1:10.

எப்போது விசுவாசிகள் (அ) மக்கள் திருவிருந்தில் ஒருங்கிணைந்து சேர்ந்து வருகின்றார்களோ அவர்கள் ஒருங்கிணைந்த தங்கள் விசுவாச அறிக்கையைச் செய்கின்றனர். அநேக திருச்சபைகளில் இந்த அறிக்கையானது ஒரு சில பொதுவான கிறிஸ்தவ உபதேசங்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டிருக்கிறது. ஆனால் இந்த திருச்சபைகளில் பொதுவான விசுவாசத்தை சிரத்தையுடன் கூடிய ஒப்பந்தப்படி எல்லா வேத உபதேசங்களையும் அடிப்படையாய் கொண்டதாயிருக்கிறது. முன்னால் ஒரு மனிதன் இத்தகைய மதப்பூர்வமான உண்மையை சாட்சியாக பகிர்ந்து கொள்ள முடியும். அவன் கண்டிப்பாக இத்தகைய நம்பிக்கையில் அறிவுடையவனாயிருப்பது அவசியம். அநேகர் கர்வக்குரல் எழுப்பலாம். நியாயந்தீர்க்கலாம்.

அப்படியே, அதே அளவில் இந்த திருச்சபையானது ஒரு வகையான பிரத்யேக உண்மையின் மேல் இருக்கிறது.

நாங்கள் மாத்திரம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்பட்டவர்களாய், இரட்சிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றோம் என்ற உணர்வு உடையவர்களாய் நாங்கள் இல்லை. நாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான ஞானமுடையவர்கள், அல்லது மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான பரிசுத்தமுடையவர்கள் என்று உரிமை கொண்டாடவில்லை.

திருவிருந்து ஆராதனையில் பங்கு கொள்ள மற்ற ஜனங்களை காட்டிலும், மற்ற எல்லாரையும் விட யோக்யதை உடையவர்கள் என்று நாங்கள் உணரவில்லை. யாரும் யோக்யதை உடையவர்கள் அல்ல. கடவுளுக்கு முன்னால் நாம் எல்லாரும் பாவிகளாயிருக்கிறோம். நாங்களும்கூட பாவிகள். ஆகவே, வேதம் என்ன உரிமை கொண்டாடுகிறதோ அந்த மிக முக்யமான வார்த்தையாகிய தேவன் அதன் எல்லா பிரிவுகளிலும், பகுதிகளிலும் இருக்கிறார் என்று நாங்கள் உறுதியாக விசுவாசிக்கின்றோம்.

வேதம் என்ன உபதேசிக்கிறதோ அதிலும் அதனுடைய எல்லா உபதேசங்களிலும் மிக முக்யமானவை என்பதிலும் வேதாகமம் மிகவும் தெளிவாயிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கின்றோம். இறுதியாக தேவனுடைய வார்த்தையைச் சார்ந்து கண்டிப்பாக உண்மையான ஐக்யத்தில் இருக்கிறோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இத்தகைய விசுவாச ஐக்யம் திருவிருந்து மேஜைக்கு முன்பாக தெளிவாக்கப்படுகிறது.

வேத வாக்யங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேரினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக 2 தீமோ 3:16.

தாமதம் நிராகரிப்பதல்ல

(வெவ்வேறான மாறுபட்ட விசுவாச அறிக்கையுடையவர்களை) நாங்கள் எங்களுடைய விருந்தினர்களாக (காண வந்துள்ளவர்களை) எங்களுடன் திருவிருந்து ஆராதனையில் பங்கு கொள்ளும்படி அழைப்பதில்லை. நாங்கள் மிகவும் அபாயகரமான இதில் பங்கு கொள்ளுகிறோம். அவர்களை அவர்கள் கருத்துக்கே விட்டு விடுகின்றோம். எங்கள் நிலையில் நிற்காதவர்களை எங்கள் உபதேசங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களை நாங்கள் உடனடியாக குறித்துக் கொள்கிறோம். இது ஒரு செய்தியல்ல. நாங்கள் இதை எடுத்துச் செல்ல முயற்சிக்கிறோம். எங்கள் விசுவாசத்தை யார் எங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்களோ அவர்களுடன் நாங்கள் எங்கள் சாக்கிர மெந்தாகிய எங்கள் திருவிருந்தை பீடத்தை பகிர்ந்து கொள்ள ஆர்வமுடையவர்களாய் இருக்கிறோம். எங்களைக் காண வந்துள்ளவர்களை ஒரு முறை எங்கள் அனுஷ்டானத்தை (அ) பழக்கத்தையும் அதன் மெய்யான காரணத்தையும் புரிந்து கொண்டால், எங்களுடன் கூட அவர்களும் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வதற்கு முன்பாக எங்கள் விசுவாசத்தைப் பற்றி விவரமான தெளிவான பூரண ஞானமுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று நாங்கள் நிச்சயமுடையவர்களாய் இருக்கிறோம். ஆகவே நீங்கள் இத்தகைய திருவிருந்து ஆராதனையில் பங்கு பெறவும், இந்த உன்னதமான கொண்டாட்டத்தில் உற்சாகத்துடன், பங்கு பெற தயார்படுத்தவும், இந்த தகவல்களை நாங்கள் உங்களுக்கு அறிவிக்கிறோம். ஒரு வேளை இது தாமதமாயிருக்கலாம். ஆனால் நிச்சயமாக இது நிராகரிக்கப்படுவதற்கு இல்லை. ஆமென்.